ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

================================================================================

## அறிவுரை 27. அழிவார் அடியார்க்குறை காண்பார்.

திருமாலடியவர்களிடம் குறை காணக்கூடாது.

अच्चासण्णविणासा अच्चुय पच्चन्ति तावये भत्तयने ।
मोक्करुयीणसुमग्गे मूढा दियहयर मण्डलम्मिव छिद्दम् ।।

அச்சாஸண்ணவிணாஸா அச்சுய பச்சந்தி தாவயே பத்தயனே |
மோக்கருயீணஸுமக்கே மூடா தியஹயர மண்டலம்மிவ சித்தம் ||

- அச்யுத சதகம்.

அச்சுதன் அடியார்களைப் பற்றிய அனேகச் சுலோகங்களில் இது ஒன்று. பிராகிருத மொழியில் உள்ள இதன் அர்த்தம்:

அச்சுதனே! உன் பக்தரிடம் தோஷங்கள் சொல்கிறவர்கள் விநாசகாலத்தை நெருங்குகிறார்கள். (இதைச் சொல்விளையாட்டு மூலம் விளக்குகிறார்.) அந்த பக்தர்கள் சூரியனை ஒத்தவர். இதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம். முதலாவதாக, பக்தன், சூரியன் என்கிற இருவருமே மோக்ஷமார்கத்தில் உள்ளவர். (சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு அதன் வழியாக மோக்ஷம் செல்வதாக உபநிஷத்து.) இரண்டாவதாக, பக்தனிடம் சித்ரம் பார்ப்பவர்களுக்கு விநாசகாலம் நெருங்குகிறது. இதுபோலவே மரணகாலத்துக்கு நெருங்கிய காலத்தில் சூரியனின் சித்ரம் காணலாம். (சித்ரம் என்றால் பிளவு என்றும், குறை என்றும் இரண்டு

அர்த்தங்கள்.) (பெருந்தவறைச் செய்வதால்,) அவர்கள் மூடர்கள். மூன்றாவதாக, அழிவுக்காலமும், அடியாரிடம் குறைகாணும் காலமும் ஒன்றுக்கொன்று தூரத்திலில்லை. மோக்ஷம் போகிறவனுக்கு மரணகாலமும், சூரியமண்டலம் பிளக்கும் காலமும் நெருங்கியவை.

இவ்வாறாகச் சிலேடையால் சொன்ன நீதி என்னவென்றால், பாகவதர்களிடம் குறை தேடிக் கண்டுபிடிக்கும் விபரீதபுத்தி விநாசகாலத்தில்தான் வரும். விநாசத்தை விரும்பாத நாம் பாகவததோஷங்களைப் பார்க்கவே கூடாது.

*****************